[illegible]

[illegible]	,,	க	,,
[illegible]	,,	க	,,
[illegible]	உ	,,	,,
[illegible]	,,	கஉ	,,
[illegible]	,,	அ	,,
[illegible]	,,	ச	,,
Bible Dissector (English)	0	0	6
One Hunured anb Fifty Contradictions cf the Bible (English)	0	1	0

ப்ரம்மவித்தியா யந்திரசாலையில்
விற்கப்படும் தமிழ்புத்தக

விளம்பரம்

கிறிஸ்தவர் விடைகளின் மறுப்பு,
இஃது ஓர் சம்ஸ்கிருத பண்டிதரால் எழுதப்பட்டது.
விலை அணு 2.

நீதிக்கீர்த்தனை	,,	க	சா
ஆன்மாவும் சரீரமும்	,,	க	,,
இஃது நாஸதிகர் கேழ்விக்கு விடை			
சன்மார்க்கபோதனி	,,	,,	ந
சீகாழித்தலபுராணம்	,,	அ	,,
வேளூர்புராணம்	,,	சா	,,
சந்தபுராணநவநீதம்	,,	சஉ	,,
பஞ்சதசோபநிஷத்து	க	உ	,,
அஷ்டாங்கயோகம	,,	ரு	,,
மனுமுறைகண்டவாசகம்	,,	ச	,,
கிறிஸ்துமதகண்டனம்	,,	க	,,
சிவனுந்தேவனுஎன்னுந்திரு நாவுக்காப்பு	,,	,,	,,
யேசுக்கிறிஸ்து மனிதனே	,,	,,	சா
நீதிநெறிவிளக்கவுரை	,,	ச	,,
சிவோத்கருஷதீபிகை	க	,,	,,

திருமுருகாற்றுப்படை பரிமேலழகருரையுடன்	,,	உ	,,
திருத்தணிகைபற்றுபபதந்தாதி	,,	க	,,
சதாசிவரூபம்	,,	உ	,,
நெஞ்சுவிடுதூது	,,	,,	சா
உருத்திராக்கமாலை	,,	,,	சா
சகாதேவசாஸ்த்திரம்	,,	க	,,

விவேகசுந்தரம்.

நெ. க- உ- ந- ச- ரு- சா எ- அ
பிரதி ஒவ்வொன்றுக்கு விலை பை மூன்று

விவேகபோதனி

நெ. க. உ. ந. ச. ரு. சா. பிரதி 1.க்கு விலை பை மூன்று

கல்விக்களஞ்சியம் கடன்பட்டகந்தன்கதை		பை	மூன்று
புருஷத்துவேஷபூதகிகதை		பை	ஆறு
திருஞானசம்பந்தசுவாமிகள்சரித்திரம்	0	0	3
சுந்தரமூர்த்திசுவாமிகள் சரித்திரம்	0	0	3
இந்துஜெயபேரிகை பிரதிஒன்றுக்கு விலை	0	0	3
ஜீனோபகாரம்	,,	க	,,
வச்சிராடங்கம்	,,	,,	ந
வியாதிமூலங்கள்	,,	,,	ந
	,,	,,	ந

ஒருபைபுத்தகங்கள்.

சத்துருசகவாசம்நித்தியசங்கடம்
நன்மை நலந்தரும்
பேராசை பெருநஷ்டம்
அடாதுசெய்தோன் படாதுபடுவன்
மனக்கவலைபலக்குறைச்சல்
துணபூஷணிசரித்திரம்
பாதிரிமார்ஸ்கூலில் பெண்களைஅனுப்பலாமா

அறிவிப்பு

சர்வதாரிவருஷத்து
ரிப்பன் தமிழ்ப்பாக்கெட்
பஞ்சாங்கம்-
தயாராயிருக்கிறது.

புத்தகம் 1-இ விலை அணு 6. தபால்பாகிங்சார்ஜ் அ[illegible] I. 1௦இ ஒனறும் 25 இ 3. ம் 5௦ இ 7. ம் I௦[illegible] I5 ம். அதிகமாகக்கொடுக்கப்படும்.

இங்ஙனம்
சை இரத்தினசெட்டியார்.
புரோப்ரயிட்டர்
மதராஸ் ரிப்பன் பிரெஸ்
316. தம்புசெட்டிவீதி
சென்னை.

CHIDAMBARAM:—Printed and Published for the Proprietor at the Brahmavida Press.

ப்ரஹ்மவித்யா.

{ ௩. புத்தகம் }

பத்திர கிரயம்
1 வருஷ 2—12—0
6 மாஸ 1—8—0
3 மாஸ 0—14—0
Iகாபி- 0—2—6
இலங்கைக்கு,
3—8—0.

{ VOL-3 }

ப்ரம்மவித்தியாபத்திரிகை.

மாதம்
இருமுறை
பிரசுரஞ் செய்யப்படும்

{ இலக்கம்-சா }

பத்திரிகைகிரயத்தை மணியார்டராகவாவது, ரூ. 1-க்கு அணு 1. சேர்த்து தபால்லேபிலாகவாவது சிதம்பரம் ப்ரம்மவித்தியாப்ரெஸ்மானேஜருக்கு அனுப்புதல்வேண்டும்.

{ NO.6 }

[illegible]

சிதம்பரம்:— கஅஅஅஹு செப்டெம்பர் ௴ கருஉ சர்வதாரிஹு புரட்டாசி ௴ உஉ

[illegible]

[illegible]

[illegible]

சரித்திரப்பயிற்சி.

(முன் தொடர்ச்சி)

இந்த விக்கிரமாதித்தன் ஆந்திரவம்சத்தில் பிறந்தவன்; அக்கினிகுல அரசர்களுக்கெல்லாம் முதன்மையானவனென்று மகா கவிகளாலும், புராணக்காரர்களாலும பிரபந்தங்களிற் புகழப்பட்ட அரசனாயிருந்தான். அக்கினிகுலத்தி லுண்டான மன்னர் யாரெனில்! கீர்த்திமான்களாயும், எனைய தேசத்தவர்களால் பெரிய காரியங்களைச் செய்பவர்களென்று அடிக்கடி புகழப்பெற்றவர்களாயும், பௌத்தமதமென்கிற துஷ்டமிருகத்தைத் துரத்தக்காரணமானவர்களாயும், பிராமண மதமென்கிற மண்டபத்தைத் தாங்க ஸதம்பங்கள் போன்றவர்களாயும் ஆண்டுவந்தார்கள். அக்கினிவம்சமென்றால் என்ன? அது எந்ததேசத்திலிருந்தது? எதற்காக அவர்கள் பரதகண்டத்தவர்களால் புகழப்பெற்றவர்களானார்கள்? பௌத்த மதமென்றால் கிறிஸ்துமதமா? யவநமதமா? அல்லது துருக்கமதமா? இவைபோன்ற கேழ்வைகளுக்கு எம்மாலானமட்டும் உத்தரம் சொல்லப்புகுவாம்.

கலியுக மூண்டானகாலத்தில் மனுவினால் ஏற்படுத்தப்பட்டமாதிரியாகவே நான்குஜாதியாரும் நெறிதவறாமல்நடந்து தங்கள் தங்கள் கருமங்களை ஆசரிப்பதில் கவனமுள்ளவர்களாயிருந்தார்களென்று முன்னரே சொல்லப்பட்டிருக்கின்றது. அப்பொழுது பரதகண்டத்தவர்கள் படித்தல், படிப்பித்தல், யாகஞ்செய்தல், போகம் முடித்தலென்னும் முதற்சாதியாரின் கருமங்களிலும், ஆளுதல், தண்டித்தல், யாகஞ் செய்வித்தல், ச

[illegible]

ம்மானம்செய்தல முதலிய இரண்டாம் ஜாதியாரின் காரியங்களிலும், கொள்ளல், கொடுத்தல், மரக்கல வியாபாரம்செய்தல், தனம் சேர்த்தல்முதலிய மூன்ருவ்வகுப்பினரின் கடமைகளிலும், இம்முச்சாதியாரின்காரியத்தை நிறைவேற்ற முதற்காரணமாகிய பூமியைச் சீர்திருத்தல், பயிர்செய்தல்முதலிய நாண்காம்வகுப்பினரின் செயல்களிலும் அணுவளவுகூட வழுவாமல் நிறைவேற்றிவந்தார்களென்று உரைத்திருக்கிறோம்.

மனுவினுல் செய்யப்பட்ட சாதிப்பிரிவும் அவரவர்கள் தங்கள் தங்கள் கருமங்களை முடித்தலும் எல்லோர்களுக்கும் நன்மையுண்டாக்கத்தக்கதென்றே எண்ணுகிறோம். எவனுயிருந்தாலும், சமமான குசாக்கிர புத்தியையுடையவனுயினும் அடிக்கடி திட்டப்பட்டும் மயக்கத்தையே அடையும் மதியுள்ளவனுயினும் ஒரேகாரியத்தில் கண்ணுயிருத்தல் அவனுக்கு மிகவும் நன்மையையே விளைவிக்கு்மதென்று எண்ணுகிறோம். ஏனென்றால் ஒரே சாஸ்திரத்தில் அடிக்கடி முயன்று பாண்டித்தியம் பெறுமொருவன் "ஆடருந்தல்" என்னும் நியாயத்தைப்போல் எல்லாசாஸ்திரங்களிலும் எல்லாக்கலைகளிலும் சிறிதுசிறிது படித்து அற்ப அறிவை உடையவனைக்காட்டிலும் அதிகஞானத்தையும் வெகுமானத்தையும் விசேஷமாயடைவான். இம்மாதிரியாக ஒவ்வொருகலையிலும் தனித்தனியே பாண்டித்தியமுள்ள அறிவினர் கூட்டமொருபக்கத்தில் இருப்பதாக எண்ணிக்கொள்வோம். எல்லாவிஷயங்களிலும் கொஞ்சங்கொஞ்சமறிந்த மற்றொருசங்கம் மற்றொருபக்கத்தில் இருப்பதாகவும் வைத்துக்கொள்வோம். முற்சங்கத்தில் எல்லாக்கலைகளும் எல்லா சாஸ்திரங்களும் சம்பூர்ணமாயிருக்கக் கூடியதுபோல் இரண்டாவது சங்கத்தில் அகப்படா. இரண்டாவதுசங்கத்தில் க்ரலக்கிரமத்தால் கலைகள் அழிந்தும்போகலாம்; படிப்புவிஷயத்தில் அறிவுள்ளோரறியும் இந்தநியாயம் சாதிப் பிரிவிற்கும் பொருத்தமுள்ளது. ஒவ்வொரு சாதிக்கும் விதிக்கப்பட்டிருக்கும் கருமமானது தவறுதலில்லாமல் நடத்தப்படுவதால் உயர்ந்தபதவியை அடைகின்றது. இதனுல் முற்காலத்தவர்களால் நடத்தப்பட்ட புராணங்களில் கூறப்படும் கருமங்கள் இக்காலத்தவர்களால் சாதிக்கக் கூடாதவையென்று உரைக்கப்பட்டபோதிலும் அஃது நிறைவேற்றப்பட்டன. இப்பொழுது இத்தேசமானது மிச்ரம் என்னுமிடத்தினுல் கெடுக்கப்பட்ட நாற்சாதிகளென்னும் பரிசுத்தமான பாற்குடங்களை உடைத்தானதாய் பரிதபிக்கத்தகுந்த கீழ்நிலையை அடைந்திருக்கின்றது. இக்காலத்தவர்களும் ஒவ்வொருகருமத்திலும் ஏகாக்கிரசித்தமில்லாதவர்களாய் நிறைவுள்ளஞானமில்லாமல் முற்காலத்திய பெரியோர்களை தூஷிக்கிருர்கள். ஒவ்வொருஜதியாரும் கண்டங்கண்டமாய் பிரிந்துபோவதும் பெருநாசத்திற்குக் காரணமென்றே எண்ணவேண்டும். இந்தவிஷயத்தைக்குறித்து சமயம் வாய்த்தகாலத்தில் எழுதுவோம். ஆகையால் நாற்சாதியின் பிரிவும் அவரவர்கள் தங்கடங்கள்கடமைகளை நிறைவேற்றலும் இத்தேசத்திற்குச்சுதந்திரம் முதலிய க்ஷேமத்திற்குக் காரணமென்றே ஸ்தாபிக்கப்படுகிறது.

அந்தந்த ஜாதியினுல் செய்யப்படவேண்டிய கடமைகளின் பிரிவினுல் வேதாத்தியயனத்தில் அதிகாரம் பிராமணர்களுக்கேற்பட்டது. உக்கிரமான தபச் முதலானவைகள் அவர்களா

[illegible]

லேயே நடத்தப்பட்டுவந்தது. கணக்கற்றயாகங்கள் அவர்களாற்றுன் நடத்தப்பட்டுவந்தது. எல்லாக்கலைகளிலும் கௌசல்லியத்தை அவர்களே அடைந்தார்கள். சுருதிமுதலானவைகளுடைய நுட்பப்பொருள்களை யவர்களே அறிந்தார்கள். பிராமணர்களுக்கு இந்த அதிகாரம் கொடுக்கப்பட்டதுபோல இதரஜாதிகளுக்கும் அந்தந்த கருமங்களில அதிகாரம் ஏற்படுத்தப்பட்டபோதிலும் பிராமணர்களைப்போல் இதரர்களாலும் தங்கடங்கள் கடமைகளில் முடிவுபெறப்பட்ட போதிலும் சாதியைப்பிரித்தல் கருமங்கள் ஏற்படுத்தல் என்னும் ஏற்பாட்டினுல் இப்பரதகண்டம உயர்ந்தபதவியை அடைந்தபோதிலும், சிலபாஷண்டர்கள் முதற் சாதியாரால் நடத்தப்படும் கருமங்கள் முதற்றரமானவையென்றும் எண்ணுகிறவர்களாயும் தங்களுக்கேற்பட்டது. கீழ் நிலமையானதென்று தங்கள் தங்கள்கருமங்களை நிறைவேற்றுதலால் பிராமணர்களுக் கொப்படியோ அத்விதமாக தாங்களும் செய்வதினுல் நற்கெதியுண்டென்று எண்ணுதவர்களாயும் பிராமணமத துவேஷிகளாய்ச் சிலருண்டானுர்கள். அவர்கள் புதுமதத்தை உண்டாக்கி அப்படிச்செய்வதால் த்விசர்களுக்கும் தங்களுக்கும் சமானமான நிலையுண்டாகவேண்டுமென்று எண்ணினுர்கள். இவர்கள் ஒருக்காலும் சிரௌதஸ்மார்த்தம் முதலியவைகளுடைய அர்த்தங்களை அறியாமல் பூசுரர்களாற்செய்யப்படும் யாகம் முதலியவைகள் பசுமாரணத்தோடு சேர்ந்திருப்பதால் பாவத்தையே கரத்தக்கதென்றுசொன்னுர்கள். பிராமணத்துவத்தைக்கிழிப்பதிலும், வேதத்தைத்துலைப்பதிலும் தேவர்களுக்கொப்பான முற்காலத்திய பெரியோர்களால் செய்யப்பட்டப் பிரபந்தங்களைஸ்வேரறுப்பதிலும், வேதவ்வியாசர் முதலான திருமாலென்னும் கோசத்தினுல பெருமை பெற்ற மகரிஷிகளாற்செய்யப்பட்ட பதினெண் புராணங்களை அறுப்பதிலும் நான்முன் நான் முன் முன்னென்று வந்த அநேகர்களாலெடுக்குமத்தடைந்த பிராமணமதத்தைக் கொளுத்தி அதனுலுண்டாகும் சாம்பலைப்பூசிச் சுத்தமானவர்களாய், அந்தந்த மதத்தின் இருதயமபோன்றவைகளைக் கெடுப்பதினுலுண்டாகும் இரத்தத்தைப்பானம்பண்ணிப் பெருந்தாகத்தையடக்கிச்சுகமாய்த்துயில்வோமென்றெண்ணி நல்லோர்களுக்குப் பயத்தைக் கொடுக்கசுரதருப்போன்ற சங்கல்பம் செய்தார்கள். எவ்விதம் யுகாந்திரங்களில் ஹிரண்ணியன் முதலிய அசுரர்களும், லங்கேசுரன் முதலிய அரக்கர்களும் நல்லோர்களைத்துவேஷிக்கிறவர்களாயிருந்தார்களோ, அவ்விதமாக கலியுகத்திய அரக்கர்களாயும்அசுரர்களாயும் இவர்களுண்டானுர்கள். இவர்கள் இம்மாதிரியாகப் பிராமணர்களைக்கேடுக்க நிச்சயித்தவர்களானுலும், சர்வசாத்திரத்தை முழுமையும் அறிந்ததாகவும், சர்வகலைகளிலும் பாண்டித்தியம் அடைந்த பரிசுத்தமான குலத்திற்பிறந்த எல்லோரகளையும் மயக்கும் சக்தியையுடைத்தான பெருமையும், பராக்கிரமமுள்ள நாயகனில்லாமல் தாங்களெண்ணிய காரியத்தைமுடிக்க வழிதெரியாமல் அட்போர்க்கொற்றவன் எப்பொழுது பிறப்பானுவென்று தாகங்கொண்டவர்களாய்க்கொஞ்சகாலம் பொறுத்துக்கொண்டிருந்தார்கள். கருணையிலலாத விதியனுலும் இத்தேயத்திற்குள்ள நன்மையை முழுதுமறந்து இவர்களுக்கேயுபகரிக்கப்பட்டது. இவர்களால் விரும்பியவா

[illegible]

யசனும் இந்து மதத்தைக் கெடுக்க ஏற்படுத்தப்பட்டான் என்றறிக.

இடையில் கௌதம கோத்திரத்திற்பிறந்த சுத்தோதனன் என்னும் பேரரசன் சாக்கிய அரசன் காசியிலிருந்து நூறுமயில் தூரத்திலுள்ள கபிலவாஸ்து வென்னும் தேசத்துக்கு அரசனாயிருந்தான். இத்தேசமானது ரோஹிணி நதிக்கரையில் இருக்கின்றது. இவ்வரசனுக்கு மாயாதேவியென்னும் ஒருவள் பாரியையாகவிருந்தனள். இவர்களுக்குக் கௌதமனென்று ஓர் புத்திரனுதித்தான். இப்பிள்ளை கௌதம சாக்கிய முனியென்றும், புத்ததேவரென்றும், அர்க்கடந்து வென்றும், சௌத்தோதனி யென்றும் சொல்லப்படுகிறான். இவன், பிதாவுக்கு ஒரே புத்திரன். அவர்களுக்கு மிக அருமையானவன்: நல்லோர்களைச்சந்தோஷிப்பிக்கிறவன்; விரோதிகளை வசப்படுத்தும் புத்திகூர்மையுள்ளவன்; சாக்கியர்களென்னும் நீலோத்பலத்தை மலரச்செய்ய சந்திரன் போன்றவன்; குழந்தைப்பருவத்திலும் அநேகமான காரியங்களால் பெருந்தேர்ச்சியை யடைந்தவனென்று புத்திமான்களால் துதிக்கப்பெற்றவன்; அழகின் அருமையால் மாரனையும் வெட்க மடையச்செய்கிறவனுக மாயாதேவியின் மடியை அலங்கரித்தான்.

விக்கிரகாராதனம் வைதிகமென்பது,

(முன் தொடர்ச்சி.)

மனுசாற்றுகின்றார்:—பருவகாலங்களில் (அதாவது அமாவாசை பௌர்ணமி இத்தினங்களில்) தேவதைகளையும் தருமசீலர்களான பிராமணர்களையும் சேவிக்கவேண்டும். தன்னை இரட்சித்தற்பொருட்டு ஈசுவரனையும்தமது ஆசிரியனையும் உபாசித்தல்வேண்டும் என்பது. இவ்விடத்தில் தேவதைகள் என்பதால் கல் முதலியவற்றால் இயற்றப்பட்ட பிம்பங்களேயன்றே அறியற்பாலன. (ஈசுவரனை வேறெடுத்தோதியதாகவே இக்கருத்து) என்று அதன் உரையாசிரியர் அப்பதப்பொருளுரைத்தார். மற்றோர்ஸ்மிருதியில் "ஓரோவீட்டிலாவது அல்லது இருபத்தொன்று வீடுகளுக்குள்ளாவது, முப்பதுவிற்கடையளவிலாவது ஓர்மனிதன் மரித்திருப்பனேல், அங்கு தேவதாபூஜை, பிதிர்காரியம் இவைகளை நிறுத்தவேண்டும்,, என்பது. ஐம்பது விற்கடையளவில் ஒரே தெருவில் சவங்கிடந்தால் ஹரிபூஜை, தேவகாரியம், பிதிர்காரியம் இவைகளை நடத்தலாகா,, தென்றுமிருக்கின்றது. அங்ஙனமே ஓரிடம் ஒருபிம்பப்பிரதிட்டாகாலத்தில் அதேவீதியில் ஒருபிணம் விழுந்தால் அதை அவ்வெல்லை கடக்கச்செய்தபிறகு பிரதிட்டையைமுடிக்கவேண்டும் என்று ஓர்ஸ்மிருதி கூறுகின்றது. அதன் வசனம் பின்வருமாறுகாண்க;—"பிரதிட்டை முதலிய சுருமகாலங்களில், கிராமங்களில் மரணம் நேர்ந்தால உடனே அச்சவத்தை அக்கிராமத்தின் புறம்பாக்கி சுருமசேஷத்தை நிறைவேற்றுக,, என்பது அவ்விதமே "சூதகம் உள்ளவன் பத்துதினங்கள் முடியும் வரையில் தேவதாபூஜை செய்தால் உசி

[illegible]

கமல்ல,, என்றும் "பிதிர்காரியம், தேவதாகாரியம், ஜபஹோமம் இவைகளை நிறுத்தல வேண்டும்,, என்றும் இருக்கக் காணலாம். மேலும், "தேவதைகளின் உற்சவத்திலும் கிராமத்திலும் தானம், தவம், யாகம், ஹோமம் இவைகளிலும முன்னே கங்கணம் பூண்ட ஒருவனுக்கு நடுவில் ஆசௌசம் நேர்ந்தால் உடனே அது போய்விடும்,, என்பது. நீசன், சூதகம் மாதவிடாய்பெற்றமாதர், பிணம்,மற்றெவ்வித அசுசிகள் சம்பந்திததாலஸ்தானஞ்செய்து பூஜையைமுடிக்கவேணடு,மென்றும் சௌனகர் எடுத்தோதினர். இவ்விதம் அநேகஸ்மிருதிகளில் அநேகவிடங்களில இந்த பிம்பாராதனம எடுத்துரைக்கப்படுகின்றதே! இனி அது வேதத்தில் இராத கற்பிதவிஷயமாயின எல்ல ஸ்மிருதிகளும் எடுத்துப்புகழுமோ? இதுமட்டிலோ இத்தரும சாஸ்திரங்கள் மட்டிலல்ல, அநேக மற்றையசாஸ்திரங்களும இப் பிம்பாராதனத்தை எடுத்து விதிக்கின்றன; ஜோதிடசாத்திரத்தில் பிம்பப் பிரதிட்டைக்கு காலஞ்சொலலப்பட்டது. மந்திரசாத்திரங்களில் "யந்திரத்திலாதல் பிரதிமையிலாதல்" என்றுதொடங்கி பூஜை விதிக்கப்படுகின்றது. இனி மாபாரதம், ஸ்ரீபாகவதம், இராமாயணமமுதலிய அநேகமரியநூல்களிலுமதேவாலயங்களைப் பற்றிச்சொல்லப்பட்டிருப்பதால் இவ்வநுஷ்டானம் அநாதியி லுள்ளதென்று தெற்றெனவிளங்கும். வீணில் அதிகம் எழுதுவதிற்பயனென்னை? உலகத்தில் உபாசனை இருவகையுள்ளது; ஒன்று அமூர்த்தம் மற்றது சமூர்த்தம் இவற்றுள் முன்னெடுத்தோதியஅமூர்த்தம் என்பது அக்கினி முதலியவத்துகளிடம்பூஜித்தலும் சமூர்த்தம் என்பது பிம்பத்தினகண் ஆராதித்தலேயாம. அவ்விதமே "அமூர்த்தம் அக்கினிகாரியம் சமூர்த்தம் பிம்பபூஜை" என்றுசொல்லப்பட்டிருக்கிறது. அவற்றுள் அமூர்த்தோபாசனை என்பதே வேதமந்திரங்களோடு நிலைபெற்றால் அதையும் சமூர்த்தம் என்றுசொல்லலாம் என்று மரீசிமுனி அபிப்பிராயப்படுகிறார் "எஜமானன் இறந்து உலகத்தில் வெகுகால மிருக்குமாதலால் யாகங்களில் தேவபாகம் சிறந்தது" அவர்வசனம். இனி அமூர்த்தோபாசனை சமூர்த்தோபாசனை இவைகளுக்குக் கிரியைகளிலும் ஒற்றுமை எடுத்துக்காட்டுவோம். அக்கினிகாரியம் செய்ய போகப்படும் குண்டத்துக்கும் கருஷணம் (அதாவது ஓர்வகை உழைத்துச் செய்யும் கிரியை)செய்தே ஆரம்பம். தேவாலயத்துக்கும் அவ்விதமே ஆரம்பம்; இவ்விடம் குண்டமசெய்தல் அங்கு கர்பகிருகம் அமைத்தல்; அவைகளைப் பிரோக்ஷித்தல் சுற்றல் முதலிய கிரியைகள் இரண்டிடங்களிலும் உள்ளன.

(மற்றது வரும் பின்)

[மொழிபெயர்ப்பு] இலத்தூர் சுந்தரராஜசாஸ்திரி

[illegible Grantha title]

[illegible Grantha subtitle line]

[illegible Grantha heading]

[illegible — Grantha-script column]

ப்ரம்மவித்தியா.

சிதம்பரம்: 1888ஆ செப்டெம்பர் 15உ சனிக்கிழமை

மறுபிறப்பு.

(முன்தொடர்ச்சி)

இனி ஏழாம் விஷயத்தைப்பற்றி எடுத்து விவகரிப்பாம். 'பிறப்பிறப்பு இரண்டும் இச்சரீரத்திற்கே உளதாதலால் இச்சரீரம் இறந்தபின் மற்றெக்காலத்தும் எவ்வாற்றானும் இவ்விதமையைப்பெறாது" என்பது ஏழாவது விஷயம்; இதன்கருத்து யாதெனின்: ஆஸ்திகர் ஒப்பியபடி சரீரமே பிறக்கும் சரீரமே இறக்கும். இங்ஙனமாயின் ஆன்மா அநாதியழிவற்ற பொருளாதலால் பிறப்பதில்லை இறப்பதில்லை. மறுபிறப்பு என்பது ஜீவனுக்கமையாது; முற்கூறியபடி சரீரத்துக்கும் ஒவ்வாது. யாம் காணும்பொழுதே சரீரம் நசித்தலால் அது மறுபடி இவ்விதம் அடையுமெனவுரைத்தல் எவ்விதமும் ஒவ்வாது. உலகத்தில் ஒருதடவை ஒழிந்த சரீரம் அவ்விதமே அமைந்து வெளிவந்ததாய் எவனும் அனுபவித்தவனில்லை. அவ்விதமுண்டாயின் இறந்த சரீரம் எனத் தினைக்க ஏதுவுண்டு; அவ்விதம் எம்மவரால் சுடப்பட்டாவது பூமியில் அடக்கம் செய்யப்பட்டாவது மிருகங்களால் உட்கொள்ளப்பட்டாவதுபோன சரீரம் மறுபடி வந்ததாய் கதைகளிலும் கேட்டோமில்லை. ஆதலால் ஆஸ்திகரேனும் நாஸ்திகரேனும் ஆராயின் உபய சம்மதமாய் பிறப்பிறப்புச் சரீர தர்மமே எனக்கூறல்வேண்டும். அங்ஙனமாயின் மறுபிறப்புண்டென்று வாதாடுதல் பயனற்றே ஒழியும் என்பதே.

இதற்குச்சமாதானம் நாத்திகர் கொண்டபடி சரீரத்திற்கே ஜனனம் அதற்கேமரணம் என்பதெமக்கும் உடன்பாடே. அதுகொண்டே யாம் சரீரத்துக்கு மறுபிறப்புண்டெனச் சாதிக்கவந்தோமில்லை. ஜீவனுக்கோ அஃதுண்டென்றோம்; இனி "நித்தியனான ஜீவனுக்குப்பிறப்பு ஏது? அவன் உண்டாவனேல் நாசத்தையும் அடைவான்; அப்பொழுது நித்தியத்தன்மை எங்ஙனம் பெறுவான்?" எனவினவில் கூறுவாம்; மறுபிறப்பு என்பது உள்ளபடி ஜீவனுக்குமில்லை சரீரத்திற்குமில்லை. ஆயினும் ஜீவன் ஓர் சரீரத்தைவிட்டு மற்றொரு சரீரம் பெறுமிடத்து அம்மறுசரீரங்கோடல் மறுபிறப்பென்று பெயரிடப்பெற்றது. ஆதலால் யாம் ஓர் சரீரம் நாசமுற நேரே பார்த்திருப்பினும் மறுபிறப்புண்டென்பதிற்கு இது மாக்ஷேபமில்லை. அது விஷயத்துக்குவேண்டிய வெகு காரணங்களை எடுத்துக்காட்டி விடுத்தோம். இவ்விஷயத்தில் பலசாஸ்திரங்களின் உண்மை

[illegible — Grantha-script column]

யறிந்தவனும் நியாயத்தாற் பயிற்சியுற்றவனும் இவ்வாறனைத்தும் சிலவிஷயத்தைப் பற்றிப் பேசுவாம். (எங்ஙனமெனில்) மறுபிறப்புண்டென்றால், யாம் காணும் சரீரமெலாம் மீண்டும் பிறக்கின்றவை அல்லவா? இதற்கு இங்கே பகருகிறது இது. சரீரமானது யாம்பார்க்குமளவில் நசிப்பதாலும் வேறுவிதத்து அறிவுள்ளதாம். எஞ்சியதை யாம் காணாமையாலும் மறுபிறப்பு எப்பொருளுக்கென்பாய் என்பது. இதற்குவிடை: நாமகண்ணுற்காணும் சரீரவுறுப்புகளில் ஒன்றேனும் மறுபடி பிறப்பதில்லை. இச்சரீரத்தினும் வேறாய் யாமுன் "ஆன்மாவும் சரீரமும்" என்றெழுதியவிடத்து, எடுத்துவிளக்கிய ஆன்மாவென்னும் பொருளே சரீரத்தைப்பெறுகின்றது. அவ்வருபொருள்களின் வேற்றுமையைப்பற்றி நாத்திகர்கள் கேட்டகேள்விகளை அங்கே மறுத்திருக்கிறோம். அவற்றை ஆங்கே சண்டுகளிக்க. ஆதலால் ஜீவனுக்கே மறுபிறப்பெனக. இனி ஒன்பதாவதை நீளதொட்டு ஆராய்வாம். "மறுபிறப்பு உண்டெனத்துணிவதற்கு முக்கியபிரமாணம் எது?" என்பது ஒன்பதாவது கேள்வி; இதற்குயாம் எவ்வளவு எடுத்துக்காட்டினும் ஒன்றேனும் பிரத்தியக்ஷமாகக் காணக்கூடாமையால் அவ்வளவு நம்பத்தக்கதல்லவென நாத்திகர்கள் எண்ணுவார்களாதலால் பிரத்தியக்ஷமாய் அவரறியும்படி சில காரணங்களையும் காட்டுவாம். இக்காலத்திலுள்ள வைத்தியர்கள் நன்றாய்ச்சரீரத்தை ஆராய்ந்து இதில் யாம் உட்கொள்ளும் ஓஷதிகளின் விகாரமே இரத்தம் என்று நிச்சயித்திருக்கிறார்கள். இவ்விரத்தம் முதிர்ந்தால் அதையே சுக்கிலமென வழங்குவது; அச்சுக்கிலம் சரீரத்தில் சிலகாலம் நின்று பரிபாகமாகப்பெறின் அதில பிந்து (ஓர்வகைப்புழு) உண்டாகும். அவ்விதம் பெண்கள் உட்கொள்ளும் அன்னம் முதலியவை அவர்கள்சரீரத்தில் இரத்தமாகும். அதே அவர்கள் சரீரத்தில் பாகம்பெற்று வாய்திறந்த ஓர்வகை சினைகள் நிறைந்த சோணிதம் என்னும் ஓர்வகை இரத்தமாகின்றது; அச்சுக்கிலமும் சோணிதமும் உசிதமான காலத்தில் கருப்பையில் கலந்தால் விந்து அச்சினைகளுட்பிரவேசிக்க, அச்சினைவாய் மூடி கிரமமாய் பருத்து சிறு சரீரமாகின்றது. அவ்விடம்பெண், நிலம்போலவும் விந்து, வித்துப்போலவும் இருத்தலால் உலகவியற்கை பிரமாணப்படி வித்தி னியற்கைப்படி ஓர்வஸ்து உண்டாகுமேயன்றி நிலத்திற்சேர்க்க மாறுபாடு பெறாது. எவ்விடத்திலாவது ஓர் வித்திட, அது அன்னியர் கைக்கு விரோதமாக வேறுமுளை உண்டாகக் கேட்டதுமில்லையே. ஆதலால் ஓர்முளை உண்டாகவேண்டி விதையே முதற்காரணம் விதைகள் இரண்டு விதங்கள்: சில நிலத்தாலன்றிக் காலத்ததாற்றானே முளைக்கும். மற்றதோ முக்கியமாய் நிலத்தையும் அவாவும். ஆதலாற்றான் சிலவிடங்களில் நிலம்போன்ற மாதர்சம்பந்தமின்றியும் சிலர் உண்டானதாகப் புராணங்கள் கூறுகின்றன. அவ்விடம் தவப்பயன் முதலிய வேறுகாரணம் இருப்பதால் அநியாயமே. அவ்வித விந்து சரீரத்தில் செல்வதும் யாம் உட்கொள்ளும் ஆகாரவடிவாற்றான்; அவற்றிலும் தழை முதலியவற்றை தின்பதில் பயனில்லை. முக்கியமாய வித்துகளே விந்துவிருத்திக்குப்பெருங்காரணங்கள். ஆதலாற்றான் வைத்தியத்தில் நஷ்டசுக்கிலனுக்கு வித்துவருக்கங்கள்சேர்ந்த லேகியம்

[illegible]

செய்து கொடுக்க விதிக்கப்பட்டிருக்கின்றது. அவ்விதம் பாலும் உபயோகிக்கப்படும். ஆதலால் யாம் உட்கொள்ளும் விதைகளாற்றான் வித்து உண்டாமென்டது திண்ணம். இனிமுதலில் விதையில் அணுவாய்நின்ற ஜீவ வஸ்து சரீரத்தில் புகுந்து சுக்கிலத்தில் கலந்து சோணிதத்தில் மூழ்கி பெரும் சரீரத்தைப் பெறுகின்றதாயிற்று. அச்சரீரத்தைவிட்டும் மீண்டும் சூரியகிரணத்தால் இயக்கப்பெற்று பனியிற்சேர்ந்து பயிர்களில் வீழ்ந்து வித்தாய் திரும்பவும் மனிதருட்சேர்ந்து மறுபடி சரீரியாகும். அவ் வித்து மனிதர்கள் உட்சென்றால் மனிதர் சோணிதசம்பந்தத்தால் மனிதசரீரம்பெறும். அவ்வித்தே மிருகங்களினுட்சென்றால் மிருகசரீரம்பெறும். அதேவித்து ஒருவராலும் உட்கொள்ளப்படாது, மறுபடி நிலத்திற்றானே விழுந்தால் மரஞ்செடி கொடியாய் அச்சரீரத்தையே பெறும். இனிப்பெருவெள்ளங்களில்அகப்பட்டழிகிமீன்முதலிய ஜலஜந்துக்களின் உட்சென்றால் ஜலஜெந்துவாகும். நிலங்களிலும் ஒவ்வோரிடத்து வெதும்பி மலத்தில் உண்டாகும்சரீரத்தைப்பெறினும் பெறும். ஆகையால அவ்வொருவித்தே இடம் காலம் இவற்றின் வேற்றுமையால் பலசரீரங்களைப்பெறுமென்றுணர்க. ஆகவே ஜராயுஜம் (கருப்பையில் உண்டானது) அண்டஜம் (சினையிற் பிறந்தது) உத்பிதஜம் (முளைத்தது) சுவேதஜம் (வியர்வையிற்பிறந்தது) இந்நான்கு வகுப்பாக ஏற்பட்டது. இக்காலதது தத்துவ சாஸ்திரிகளும் (Botany) பாடனீ என்னும் நூலில் ஜீவவஸ்து வித்துக்களில்இருப்பதாய் அறிந்தார்கள். இவ்விஷயம் நமது சுதேசவைத்திய புத்தகங்களிலும் சிலபுராணங்களிலும் கருப்போபநிடதத்திலும் மற்றும் சில்பெரியோர் எழுதிய நூல்களிலும் விரிவாயிருக்கின்றது. இனி பலசரீரங்களிலும்சென்றும் வெளிவந்துமிருக்கும் சூக்கும வத்துவே ஆன்மாவென்பது. இனி அவன் வித்துக்குள்ளிருக்குங்கால் ஏன் ஒன்றையும் அறிந்தானில்லை? யெனில் அவனுக்கு அக்காலம் இந்திரியாதிகட்டானங்களான கருவிழி முதலியன வின்மையால் அவனுக்கு அறிவில்லை. இனி அச்சீவன் வேறுசரீரம் பெறுவது தன்னிச்சையாற்றானா? அல்லது காரணமில்லாது தற்செயலாற்றானா? எனின், இவ்விரண்டுமில்லை. முன் சரீரத்தைவிட்டகன்றுபோகும்சமயத்தில் உண்டாகும் விஷயவாசனையே வரும் சரீரத்தை ஜீவனுக்குக்குறிக்குமென்று முன்னரேவிளக்கினோமல்லவா? இவ்வித சங்கற்பம் அவன் (அதாவது ஜீவ சுரூபம்) வித்தின்கண் அடங்கிநின்றபொழுதும் உண்டாகலாம். அக்காலமும் அவனுக்கு மனமிருத்தலால் என்பது சிலர்கருத்து. சிலரோ அவனுக்கு அவ்விதசங்கற்பம் உதிக்காவிடினும் அதற்கு முன்சரீரத்தைவிடுங்கால் உதித்த சங்கற்பம்முற்றுப்பெறாது நடுவில் வித்திலடங்கினனாதலால் அச்சங்கற்பம் முற்றுப்பெறுமளவும் ஜீவன் மற்றொருசரீரத்தை அவாவியேநிற்பானென்பார்கள். ஆதலால் பிரத்தியக்ஷப்பிரமாணத்தால் வத்துக்களை ஆராய்ந்தறிபவனுக்கும் மறுபிறப் புண்டென்பது உள்ளங்கைநெல்லிக்கனிபோல் தெற்றெனவிளங்கும் என்பது திண்ணம். இனி பத்தாவது கேள்வியைப்பற்றிச் சிறிதாலோசிப்பாம்.

[illegible]

“அஃது ஞானிகளுக்கியற்கையாயின் ஞானிகளுக்கு மறுபிறப்பற்றுப்போகக் காரணமியாது?” இவ்வினாவின் உட்கருத்து,—“ஜீவனென்னும்பொருள் அநாதியாயும் அதுசரீரசம்பந்தத்தை எக்காலமும் பெற்றிருக்குமென்றும் ஒப்பிய ஆஸ்திகர்கள்கொள்கையில் எக்காலத்தும் ஜீவன் சரீரத்துடனே கூடியிருக்கவேண்டி வருமே? அங்ஙனமாயின் ஞானிகளுக்கு மறுபிறப்பு மாறிப்போமென்ற அவர்கூற்று எவ்வாற்றானும் இசையாது” என்பதே. இனி ஞானிகளிடத்தில் மாத்திரம் சரீரத்தைவிட்டகன்று ஆன்மா சுதந்தத் தனிப்பொருளாய்நிற்குமென்பது யுக்திக்குப் பொருந்துமேல், மேலும் அவன்முத்திபெற்ற நகு வெகுகாலம் (அதாவது எல்லைகடந்தகாலம்) சரீரமற்றிருப்பது உண்மையாயின், ஏன் இச்சரீரத்தை அடையுமுன்னமே ஜீவன் அநாதியிலே சரீரத்துடன் சம்பந்தப்படாதுநின்றான்; இப்போது மூர்த்தா சரீரியாயினன்; இதைவிடில் (சரீரத்தை அடைந்ததாகக் கண்டு தெரிந்தபடியால்) இனி அடையானென்பதும் யுக்திக்கும் பொருந்தாது. இனி எக்காலமும் ஜீவன் சரீரத்துடன் இருப்பானென்பது துணிபன்றாதலால், ஞானிகளிடம் அசரீரனாய் ஜீவனிருத்தல் உளதெனில், அநாதியாய் அசரீரனாயேயிருந்து இடைமுறையே சரீரத்திற் புக்கானென்பதாகியாய் ஓர்சாரினர் சித்தாந்தமும் வழுவற்றதே ஆதலின் ஜீவனுக்கு மறுபிறப்பென்று முற்கோடாய்முடிந்தது. இவ்விதவாதம்புரியாதிகர்க்கு வருமாறு விடையளிக்கவேண்டும்; அதாவது:—யாம் ஜீவனுக்கு மறுபிறப்புண்டென்றால் முத்தனுக்குப்பிறப்பில்லாவியல்புற்றமையாது? முத்தன்தவிர மற்றைய ஜீவர்கட்கே மறுபிறப்புண்டென்று சாதிக்கவெழுந்தோமேயன்றி எவ்வித ஜீவர்க்கும் எக்காலத்தும் மறுபிறப்புண்டென்று சாற்றினோம்? முற்சரீரத்தை விடுமிடம் உண்டாகும் வாசனையே ஓர் ஜீவனுக்கு மறுபிறப்பின் முக்கிய காரணமென்று யுக்திகளுடன் எடுத்துக்காட்டினோம். இரும்பிற்கும் காந்தத்திற்கும் உள்ளசக்திபோல் சரீரத்திற்கும் ஜீவனுக்கும் ஒன்றையொன்றிழுக்குந்தன்மை உண்டென்றோம்; முன்சேர்ந்திருந்த சரீரான்மாக்கள் ஒருக்கால் தனதான்மாவுக்கு நேரிடும் தேகாபிமான வழியால் அத்தேகக்குறிகளாகிய வியாதிகன்மங்கள் முதலியன நேரிடில் அத்தேகத்தைவிட்டகன்று அத்தேகத்தைவிடும் க்ஷணத்தில் உதிக்கும் வாசனைக்கேற்ப ஓர்சரீரத்தைத்தேடிக்கொண்டே விதைமுதலியவற்றில் சிலகாலம் பொழுதுபோக்கினும் நோக்கம் அச்சரீரத்திற்றானே அமையவைத்திருக்கும். அதுநடுவில் வித்திலொடுங்கினும் மறுபடித்தாம் கருதியசரீரம் கிடைக்கும்வரையில் அதேவாசனையைமுன்வைத்திருக்கும். எவ்விதமேனும் அவ்வாசனைக்கேற்ற சரீரத்தைப்பெறும்; பெற்றுசிலகாலஞ்செல்லின் அதைவிட்டு நீங்கும். இவ்விதம் சுழன்றுவருகையில் எக்காலம் வாசனையின்றி ஓர்சரீரத்தைவிடுமோ, அக்காலத்திற்றான் மறுபிறப்பற்று நிற்கும்; அதுவேஅதற்குமுக்தி. ஆதலால் வாசனைகளுடன் கூடின ஜீவன் ஒருசமயமும் சரீரமில்லாமலிராது. வாசனை ஜீவனுக்கநாதியாயின் அஃது எவ்விதம் அவனை விட்டொழியும்? எனின் இதற்கு ஆன்றோர் அளிக்கும் விடையிது,—“உலகத்தில் ஓர்விதநெல் முளையும் முளையில் வித்தும் சுழன்று சங்கிலி தொடர்பாய் அநாதியில அச்சக்தி

[illegible]

[illegible]

ஶுபம்!!

[illegible]

மையமைப்பெறினும் ஓர்விதைசிறிதுவெதும்பினால் அங்குஅச்சச்திஒழிகின்றதல்லவா? அங்ஙனமே ஜீவனிடம் வாசனையால் சரீரம், சரீரத்தால் வாசனையென்ற அனுதியில் அமைந்திருப்பினும் ஏதோவொரு சரீரம் ஞானாக்கினியால் வெதும்பியதாயின் அங்கு வாசனை ஒழியும்,, என்பது. அக்காலம் சுத்த அறிவான ஜீவன் அறிவாகிய பரம்பொருளில் கலந்து சுகிக்கின்றான். எக்காலத்தும் அவன் மற்றொன்றைப்பற்றி நிற்குந் தன்மையுள்ளவனாதலால் பந்தத்தில் சரீரத்திலும் முத்தியில் அப்பரம்பொருளிலும் கலந்திருப்பான் எனபார் ஓர்சாரீனர்.

(இன்னும் வரும் பின்)

ஸம்ஸ்கிருதபாஷை

(முன் தொடர்ச்சி)

வியாகரணம் (இலக்கணம்)

வியாகரணமென்பது முன் யாமெழுதியபடி ஸம்ஸ்கிருதபாஷையில் பதவியல் (அதாவது பதங்களுடைய இலக்கணமே) என்பது எல்லோரும் அறிந்திருப்பார்கள். அவ்வியாகரணம் இலக்கியங்களுக்கேற்பவர் பலவிதங்களாயினும் அவை ஒருவகைச்சுருக்கி வியாகரணங்கள் ஒன்பதெனபார்கள். இவ்வியாகரணம் இத்தேசத்தில் நிலைபெற்ற வழியை யாம் முன்னோரிடம் கேட்டமட்டிலும் காரணங்களால் அறிந்தமட்டிலும் எடுத்துரைப்பாம். ஆதியில் வேதாகம புராணங்களாகிய இலக்கியங்களைக்கண்டு அவற்றிலுள்ள சொற்களை எளிதில் தெரிந்து கொள்ள வேண்டி பிரமதேவன் பிருஹஸ்பதிக்குபதேசித்தார் என்றும், அதையேவிரித்து அநேக ஆயிரவருஷங்களால் இந்திரனுக்கு அப்பிருஹஸ்பதி உபதேசித்தார் என்றும், அப்பிருஹஸ்பதி செய்தகிரந்தமே சத்தபாராயணம் என்ற வழங்கப்படுமென்றும், அதை அம்மெய்க்குருவரிடம் கசடறக்கற்றுணர்ந்த அவ்வமரபதி தான் நன்றாய் ஆலோசித்து முன்வந்தவழியினும் லகுவான மற்றொருவழிகண்டுபிடித்தான். அதாவது முன்சத்தபாராயணத்தில் அப்பாஷையில் உள்ளசொற்களை உள்ளபடி எடுத்தோதி அவைகளைக் குற்றமற்ற சொற்களெனக்காட்டி, வந்தவழியை மாற்றி, சொற்களுக்குப் பகுதிகள் விகுதிகள் உண்டாக்கி, அவைகள் ஒன்றுகூடி ஓர்பொருளை உணர்த்துங்கால் உண்டாகும் திரிதல் கெடுதல் முதலிய விகாரங்களைசாமானிய விசேஷத்தன்மைபெற்ற விதிவிலக்குகளால் காட்டி, ஒவ்வொரு குதியினின்று பற்பலசொற்களை உண்டாக்கி அவைகுற்றமற்றனவ எனஎடுத்துககாட்டுதல் என்பதே. இவ்விதம் அவ்விந்திரன் அமைத்த வியாகரணமே ஐந்திரம் எனவழங்கிவந்தது. பிறகு காலஞ்செல்லஅதை வியாகரண அவ்விந்திரனது மாணாக்கரான ஸ்ரீபரத்துவாஜ மாமுனியால் வெளியிடப்பட்டு பலரிஷிகள் அதைப்படித்துவந்து அதில் உள்ளஒவ்வோர்விஷயங்களை நன்காராய்ந்து அவற்றின்சொருபத்தை அதிலும் மிக எளிதில் அறியும்படி அபிசலி, காசகிருச்சனர், சாகடாயனர் முதலிய பலரிஷிகள் அநேகவியாகரணங்களை எழுதினார்கள். இவற்றுள் சிலவியாகரணங்கள் வேதத்திலமைந்தசொற்

[illegible]

ஶுபம்!! [illegible]

களுக்கே இலக்கணங்கூறி நின்றன. அவைகளே கணக்கிட்டதில் ஒன்பதாயின; இவ்வொன்பது வியாகரணங்களையும் படித்தே முற்காலத்தவர் இலக்கியநிச்சயம் பெற்றார்கள்; பிறகு கலியுகாதியில் ஸ்ரீகதமகரிஷியின் கோத்திரத்திற் பிறந்து மகா பாண்டித்தியம்பெற்ற வரருசியென்டவர் ஸ்ரீமுருகக்கடவுளின் கிருபையால் காதந்திரம் என்றும் கலாயம்என்றும் வழங்கப்படும் வியாகரணத்தைச்செய்தார். இஃது இங்ஙனமிருக்க, சுமார் (5000) ஐயாயிரம் வருஷங்களுக்குமுன் அவதரித்த ஸ்ரீமான் பாணினி என்கிற ஓர்மகரிஷி, ஸ்ரீபரமசிவபிரானது திவ்விய பிரசாதத்தால் தற்காலம் வழங்கிவரும் அஷ்டாத்தியாயீ என்கிற வியாகரண சாஸ்திரத்தை இயற்றினார். பிறகு ஓர்காரணவசத்தால் முற்கூறிய அவ்வரருசிமாமுனிவரே இதற்கு முதலுரையாசிரியரானார். இவர்எழுதியவியாகரணமே இக்காலத்தவரால் கொண்டாடப்பட்டுவருகின்றது; இதில வைதிக, லௌகிக இரண்டிற்கும் இலக்கணம் அமைந்திருக்கின்றது; இதிற்சிலபொருள்கள் கணவுவிளக்காமையால் அவைகளை வரருசியார் எடுத்துக்காட்டினர். அதற் குறைசெய்தருளிய ஸ்ரீபதஞ்சலிமாமுனிவரும் அவ்வரருசியார் இயற்றியதில் உண்டாகும்ஐயந்திரிபு முதலியவற்றை விலக்கினாரன்றி வேறில்லை. இவ்வுண்மையறியாத தமிழ்ப்புலவர் "வடமொழியில் இலக்கணங்களெழுதிய பாணினி முதலியோர் ஈசுரக்கிருபையைப்பெறாது தம் துற்புத்தியைக் கொண்டே செய்தார்கள் என்றும், அதனால் ஒன்றுக்கொன்று விரோதித்து முன்னெழுதியதைப் பின்வந்தவர் மறுத்தாரென்றும் கொண்டுமயங்கினார்கள். அவர்கள் மயக்கம்விலக இவ்வியாகரணத்தில் மூலசூத்திரஞ்செய்த பாணினியார் அபிப்பிராயத்திற்கு ஸ்ரீவரருசியாரும் அவருடைய திருவுளத்தில் ஸ்ரீபதஞ்சலியாரும்மாறுதலுமின்றி இணங்கியிருக்கின்றார்கள் என்பதை அவர் எழுதிய கிரந்தங்களைக்கொண்டே எடுத்துக்காட்டுவோம்.

ஐயா, இம் மும்முனிகளெழுதிய புத்தகங்கள்: சூத்திரம், வார்திகம், மாபாடியம் ஆகவே மூன்று; இவற்றுள் மிகவிரிந்தது மாபாடியம் ஆகலால் அதையே எமக்குச் சூத்திரவார்திகளிலுண்டாகும் போலியபிப்பிராயங்களை மாற்றக்கருவியாய்க்கொண்டோம். முக்கியப்பிரமாணமோ! சூத்திரமே. ஆதலாற்றான் அம்மாபாடியம் வகுத்தருளிய பதஞ்சலியார் மாபாடியத்துவக்கத்தில் பஸ்பந்சா என்னுமிடத்தில் "[illegible]" சூத்திரத்தில் காணுஞ் சக்தியை ஒருவன் சொல்லின் அது நமக்கு உடன்பாடல்ல" என்றும் '[illegible]', இச்சூத்திரங்களின் பெருமையை நோக்குமிடம் இவற்றுள் பயனற்றுள்ள ஓரெழுத்தையேனும் யான்கண்டேனில்லை,, என்றும் [illegible] சூத்திரத்தில் ஒருசக, என்கிற எழுத்துக்கூட பயனற்றிராதென்று சூத்திரங்களை வியந்துபாராட்டினர். அவ்விதமே வாக்கியபதீயம் என்கிற பெருநூலாசிரியரும் [illegible]

[illegible]

[illegible]

வா:யநீதி:। [[illegible]]

அஎ. [illegible]
அஅ. [illegible]
அகூ. [illegible]
கூ0. [illegible]
கூக. [illegible]
கூஉ. [illegible]
கூங. [illegible]
கூச. [illegible]
கூரு. [illegible]
கூசா. [illegible]
கூஎ. [illegible]
கூஅ. [illegible]
கூகூ. [illegible]
க00. [illegible]
க0க. [illegible]
க0உ. [illegible]
க0ங. [illegible]
க0ச. [illegible]
க0ரு. [illegible]
க0சா. [illegible]
க0எ. [illegible]
க0அ. [illegible]
க0கூ. [illegible]
கக0. [illegible]
[illegible]

...சூத்திரவார்த்திகத்திலும் மாபாடியத்திலும் வாருசியார் அருளிய வார்த்திகத்திலும் உள்ளது சூத்திரத்தில் உள்ளதே, என்றுரைத்தார். [illegible] எவன் உத்தமாதிகாரியோ, அவன் சூத்திரத்தை எல்லாவிலக்கியங்களையு மறிவானென்று மஆசிரியரான பதஞ்சலியாரெடுத்துரைத்தார். அங்ஙனம் சூத்திரவாக்கியத்தைத் தழுவாது வார்த்திகத்திற்றுப் பொருளெய்தனுமபுலப்பட்டால் அஃது 'உ[illegible]' சூத்திரத்தின் புறம்பானது எனத் தள்ளுகின்றார். சில தமிழ்ப் புலவர்கள் சொள்ளைசைப்படி பாணிநியார் வசனத்தில் அதை வாருசியார் மறுத்து வேறிலக்கணங்கூறுவதும், அதைமறுத்துப் பதஞ்சலியார் மற்றொன்றைக்கூறுவதும் உளதென்பதுண்மையாயின், முற்காட்டிய வாக்கியங்களெல்லாம் விரோதப்படுமல்லவா? ஆதலால் அவ்விதங்கொண்ட கொள்கை பேதைமைக்கெனக் கொள்க. இதுநிற்க; இப்பாணினி காந்தாரதேசத்தவரென்று அறியத்தகாததாக இருக்கின்றது.

இன்னும்வரும்.

பாலநீதி.

முன்தொடர்பு.

அஎ. முகக்குறிப்பை யறி அகக்குறிப்பைத்தெரி.
அஅ. மூலமறிந்து முடிவுபொருந்து.
அகூ. மெல்லியபேச்சுக் கொல்லுங்கோபம்.
கூ0. மேலோர் சொல்லை மேன்மை படுத்து.
கூக. மைந்தர் மேன்மை தந்தைதாய் பெருமை.
கூஉ. மொழி மொழுத்திருக்குதல் அருவருப்பாகும்.
கூங. மோகமும்மதமுஞ்சோகமாய்முடியும்.
கூச. யத்தனஞ்செய் சித்தியாக்கடவுளால்.
கூரு. யாசிப்பவனை தூஷிப்பது குறை.
கூசா. யுக்தம்பார்த்து உபகாரஞ்செய்.
கூஎ. யூகஞ்செலுத்து யுக்திபேலார்.
கூஅ. யோகம்வந்தால் தியாகம் வேண்டும்.
கூகூ. ரம்மியமாம் மனத்தன்மை நலம்.
க00. லபந்தப்பினால் நபந்தப்பும்.
க0க. லாபகேடு லோபத்தால் வரும்.
க0உ. லிபிஸகற்றால் சபைலயகமுழ்.
க0ங. லோகவாழ்வில் மோகங்கொள்ளேல்.
க0ச. வருத்துத்தெரிந்தால் வருத்தந்தீரும்.
க0ரு. வாதஞ்செய்வதில வல்லமைகூடாதல்.
க0சா. விதிபோலாமென மதியை விடாதே.
க0எ. வீணர்க்குப் பிரியம் விருதாக்காரியம்.
க0அ. வெற்றிபெறலாம் வேலைத்திறமையுடன்.
க0கூ. வேதமகிமை ஓதியறிவாய்.
கக0. வையுட்டழக்கம் கைசேலிழப்பம்.

சொப்பனம் சத்தியமென்பதைமறுத்து, அறிவே உலகமென வுரைத்தல்.

(முன் -எஅ-வது பக்கம் தொடர்ச்சி)

"மண்ணானது அணுவாயும் அணுவானது பரமாணுவாயும் பாகிக்கப்படினும் அவை முடிவிலிலலாமற்போய்விடுதல அசங்கதம். கண்ணுக்குக் காணக்கூடாமல் அதிசூக்குமமாயிருக்குமத்தால் அதனையில்பொருளாகத் துணிதல் கூடாது" என்று பிரதிவாதியார் கூறினர். இதனால் உலகை இல் (அசத்து) பொருளெனக் கூடாதெனபதே யவர் சம்மதம். ஆகலின் உலகத்தை நியாய வழியேயன்றி காரியகாரண ஏதுவால் கடத்தைவைத்து விவரிப்பாம்:—

கடமென்பது செய்வதற்கு முன்னுமில்லை; அழிந்தபாட்டிற்குப் பின்னுமில்லை; இடையில் மாத்திர முளது. ஆதலால் கடமிருக்கின்றகாலத்தில் மாத்திரம் சத்தெனின், முன்னும் பின்னுமிலலாதகடம் இடையில் மாத்திரம் எங்ஙனந் தோன்றும்? "இல்லது வாராது" என்னும் நியாயத்தால் இல்லது இல்லதேயாமன்றி யோர்போது முள்ளதாகாது. இடைநின்ற காலத்து உள்ளதுதான் எனின், மண்ணாயிருந்தபோது கடமில்லை; [illegible] மண்ணினிடத்து வளைவு குவிவு முதலிய குணங்கடோன்றிய போது கடமென்னும்பெயரை யடைகின்றது. வளைவு குவிவு முதலியன குணங்களேயன்றிக் குணியாகமாட்டாது. அந்தக் குணங்களும் குணியான மண்ணினிடத்துத் தோன்றி அம்மண்ணினிடத்தே காணப்படுகின்றன. குணியெப்போதிருக்கின்றதோ, அப்போதே அதற்கொரு குணமுமுளதென்றுணர்க. வளைவு குவிவு முதலிய குணங்கடோன்றுதற்கு முன்னரும் உருட்சி அல்லது வேறுகுணம் உளதென்பதாம். மண்ணான குணி தன்குணத்தோடுங் கூடிய மாத்திரத்தானே அம் மண்ணுக்குக் கடமென்னும் பொருட்பெயர் எவ்வாறு பொருந்தும்? [illegible] மண்ணான குணியும் அதனிடத்துள்ள வளைவு முதலிய குணங்களுமே யல்லாமல் கடமென்னும் சொல்லுக்குப் பொருள் வேறேயில்லாமையால், மத்திய காலத்தும் கடமிலதென்றே கூறத்தகுமென்க. இதனால் கடமென்னும்பொருள் எப்போது மிலதென்றே துணியப்படுமென்க. கடமானது எக்காலத்தும் இலதாயின் கடமென்னும் தோற்றமு மில்லாமற்போகவேண்டும். கடத்தோற்றம் காணப்படுகின்றமையால் கடமில்லையென்று எவ்வாறுரைக்கப்படுமெனின் தோற்றமெல்லாம் பொருளாகும் வகையில் கயிற்றின்கண் தோன்றும் பாம்பும் மெய்யாகவேண்டும். பாம்பு பொய்யாகத்தோன்றினும் கயிறென் றறிந்தவிடத்துப் பாம்பு தோன்றவில்லை; கடம அவ்வாறல்ல; மண்ணைத்தவிர எப்போதும் கடமில்லையென்று அறிந்த பினபும் கடம் தோனறுகின்றதே எனின், தோற்ற மிரண்டுவகை: காரணத்தைக் கண்டபின்னர் காரியந் தோன்றா திருப்பதொன்று; அது கயிற்றின்கண் பாம்பு முதலியன; காரணத்தைக் கண்டபின்னரும் காரியந் தோன்றுவதொன்று; அது கானல்நீர் முதலியனவாம். கடத்தோற்றம் கானல்நீர் முதலியனபோல்வதாகலின் காரணமான மண்ணை எப்போதும் உளதெனவும், காரியமான கடம் எப்போது மிலதெனவும் ஆராய்ந்து தெளியினும் கடத்தோற்றம் இல்லாமற்போவதில்லை. இதுவரையிலும் தோற்றம் பொருளல்லவென் றுரைத்தோமேயன்றித் தோற்றமுமே இல்லதென் றுரைத்தோமல்லேம்.

"இல்லது வாராது, உள்ளது போகாது" என்னும் நியாயத்தால் காரியமில்லையாயினும் காரியம் செய்யாக்கால இல்லையேயல்லாமல் செய்தால் உளதாகாதோவெனின், செய்பவன் காரணத்தைக் குணவேற்றுமை செய்வதன்றி இல்லாத பொருளையுண்டாக்கமாட்டான். மண்ணால் இயற்றிய கடம மீண்டும் மண்ணாயவிடத்து "உள்ளது போகாது" என்னும் நியாயத்தால கடமில்லாமற்போதல் அமையாது. கடம்போலும் தோற்றின தோற்றம் இல்லாமற்போனதேயன்றிக் கடமான பொருளொன்றிருந்து இல்லாமற் போனதல்ல. ஆகலின் "இல்லது இல்லதே, உள்ளது உள்ளதே" இல்லதை உள்ளதாகச் செய்யவும், உள்ளதை யில்லதாகச் செய்யவும் எவராலும் ஆகிலில்லை.

இனி "இல்லது வாராது" என்பது உண்மையாயினும், இல்லாத கடம் வனைவதற்குமுன் காரண ரூபமாயிருந்து, காரியப்படும்போது வெளிப்பட்டது என்றுரைக்கப்படும் எனின், காரியமானகாலத்தும் மண்ணையன்றிக் கடமென்னும் சொல்லுக்குப் பொருளில்லாமையாலும், காரணமான மண்ணினிடத்தும் கடமில்லாமையாலும் கடமானது இல்லையென்றே கூறத்தகுமென்க. காரியப்பட்ட அவசரத்தும் கட மிருந்த லன்றுகாரணத்திலிருக்கின்றதென்றுவது உரைக்கலாம்? ஒருவர் மற்றொருவரிடத்துப் பேசிக்கொண்டேயிருந்து, சற்றுநேரம் வேறுவேலையிலிருந்து, பின்பு அவரைப் பார்த்தபோது, அவர் காணாமற்போவாரேல் அவர், வீட்டின்கண் அல்லது வெளியிடத்தின்கணிருப்பாரென் றனுமானிக்கவிடமுண்டன்றோ? முன்னர் அவரைக் கண்டு பேசியிராவிடத்து, அவர் வீட்டினுள்ளிருப்பாரென்றெவ்வாறு அநுமானிக்கலாம்? அதுபோல் காரியப்பட்ட காலத்துக் கட முள்ளதாகக் கண்டிருப்போமானால் கடமில்லாதபோது காரணமான மண்ணின்கண் அடங்கியிருக்குமென அநுமானிக்கத்தகும். அவ்வாறின்மையான் கடமிலதென்றே கூறத்தகும். இதனாலே கடம் மண்ணின்கணிருக்கவுமில்லை; வெளிப்படவுமில்லையென்றறிக.

இரண்டு பொருள்கள் ஓரிடத்தின்கணிரா ஒன்று பிறிதொன்றக்கு மேலாகவேனும், கீழாகவேனும், பக்கமாகவேனுமிருத்தல்வேண்டும். மண், கடம் ஆகிய இரண்டுபொருள்களுள்ளனவாயின் மண்ணுக்குக் கடம் எப்பக்கத்திலுள்ளது? எப்பக்கத்திலேனு முள்ளதாயின் மண்ணுக்குக் கடம் வேறாகவே யிருக்கவேண்டும். அவ்வாறிலலையாமென்பது கண்கூடு. [illegible]

[illegible]வ்யவஹாரமாகச் ஒன்றில் பிறிதொன்றிருப்பது ஒன்று உண்மையும், ஒன்று தோற்றல் மாத்திரமுமாயின் அமையும்; கயிற்றிற் பாம்பும், கானலினீரும்போல. அங்ஙனம் மண்ணிற் கடம் தோற்றமேயல்லது பொருளில்லையாமென்பது.

மண்ணினிடத்து வளைவு குவிவு முதலிய குணங்களுள்ளனவேயெனின் அவையும் தோற்றமேயாம். அவ்வாறன்றி ஒருமண்ணுயினும் வளையவும் குவியவும் கண்டோமில்லை. எல்லா மண்ணும் ஒருங்கு சேர்ந்து வளைதல் குவிதலான தருமத்தையடைந்தனவெனின், எல்லாஞ் சோகதுண்டான தருமம் ஒவ்வொன்றினுக்கும் சிறிது சிறிதாக வேனும் காணப்படவேண்டுமல்லவா? அவ்வாறில்லாமையால் மேற்கூறிய தருமங்களையும் பெற்றதேயில்லையென்பதாம். இதுவரையிலுரைத்த நியாயங்களால் காரணமொன்றே முக்காலத்துமுள்ளதென்றும், காரிய முக்காலத்துமில்லையென்றும், அஃது சொல்மாத்திரமும் தோற்றல் மாத்திரமுமாமென்றும் கூறினும். இதனானே மண் எப்போதும் உள்ளதென்பதும், கடம் எப்போதுமில்லதென்பதும் துணியப்பட்டமை காண்க.

ஒருபொருள் உண்டாகவேண்டுமானால் முன்பு இல்லாதிருந்தே உண்டாகவேண்டும். இல்லாதிருந்தது இறந்தகாலத்தில்; உண்டாதல் நிகழ்காலத்தில்; இறந்தகாலமும், நிகழ்காலமும் ஒன்றல்ல. அங்ஙனமாகவிடத்து இன்மையாயுள்ள காலமும், உண்மையாயுள்ள காலமும் வேறேயாம். ஒரேகாலத்து இன்மையும் உண்மையும் ஆதலால் பொருந்தாது. கடம் உண்டாமிடத்துக் கடம் இருந்து தோன்றிற்றா? இல்லாமல் உண்டாயிற்றா? இவ்வினாவுக்கு இருந்தே தோன்றிற்றெனின், இருந்தது தோன்றுவதற்கிடமில்லை: இல்லாததே தோன்றிற்றென்போமாயின் "இல்லது வாராது" என்னும் நியாயத்தால் இல்லது தோன்றுதல் அமையாது; அன்றி இன்மையும் உண்மையும் காலவேறுபாட்டைப் பெற்றிருக்கின்றமையால் நிகழ்காலத்தில் இன்மையும் உண்மையுங்கூடா. இதனால் பொருள் தோன்றுவதற்கே யிடமில்லையென்றுணர்க. ஒருபொருள் அழியவேண்டின் உள்ளது ஒருகாலமும், அழிவு ஒருகாலமும் ஆகும். அழியுங்காலத்து இருந்தது அழிந்ததா? இல்லாதது அழிந்ததா? இக்கேள்விக்கு இருந்தது அழிந்ததென்றே விடை அளிக்கவேண்டும். இருப்பதாய உண்மையும் அழிவதாய இன்மையும் ஒரே காலத்தினவையா. ஆகலின் உள்ளபொருள் அழிவுபாடடைவதற்கிடமின்றென்க. "இல்லதுவாராது, உள்ளது போகாது" என்னும் நியாயம் இதனை உறுதிப்படுத்துகின்றது.

காரியமானகடம் அசத்தானாலும் காரணமான மண்ணுயினும் சத்தென்று கூறலாமேயெனின், எது காரணமெனப்படுமோ, அது பிறிதொன்றிற்குக் காரியப்படவேண்டும். வஸ்திரத்திற்கு நூல் காரணமேனும், அந்நூல் பஞ்சினுக்குக் காரியமாம். அங்ஙனமே கடத்திற்கு மண் காரணமாயினும் அம்மண்ணும் தன்காரணமான அணுவுக்குக் காரியமாம். காரியமெனப்பதனைத்தும் எப்போதும் இன்றென்று முன்னரே கூறியுள்ளேமாகலின் மண்ணும் அசத்தென்றே துணியப்படுமென்க.

காரியமாகவேனும் காரணமாகவேனும் உள்ளது யாதோ, அதுவே உண்மையாயுள்ளது எனின், காரியமாகவேனும் காரணமாகவேனும் இருந்தது யாதோ, அது காரியமாகவாவது காரணமாகவாவது இருக்கவேண்டும். காரியமென்றனைக்கின்றேமெனின், காரியம் முக்காலத்துமில்லையென்று துணியப்பட்டது; காரணமென்றாலோ எது காரணமோ அது காரணமாகவேயிராமல், பிறிதொன்றுக்குக் காரியப்படுகின்றது. காரியம் முக்காலத்துமின்றென்பதே துணிபாம். காரிய காரணம் சங்கிலித்தொடர்பாய் முடிவின்றி நிற்குமென்னின், அதுவும் காரிய காரணத்திலடங்கி அசத்தாகின்றது.

பரமாணு அழியாமல் எப்போதுமிருந்து காரியப்பட்டு மீண்டும் அழிந்து காரணமாகவேயிருக்கும்; அது ஓர்போதும் காரியப்படுவதில்லை; எப்போதும் காரணமாகவேயிருப்பதொன்றாம். ஆகலின் யாவுங் காரியப்பட்டுப் பரமாணு மாத்திரம் காரியப்படாதென்பதற்கு நியாயம் ஏதும் புலப்படவில்லை. அதுவே காரணமாமெனின் ஓர் பரமாணு பிறிதோர் பரமாணுவினோடும், அது மற்றொரு பரமாணுவினோடும் கூடி, யிவ்வாறே காரியப்பட்டு மகத்தாகவேண்டும். முன்பு ஒரு அணுவோடு மற்றொரு அணு கூடுமாயின், ஒருபக்கங் கூடி, மற்றப் பக்கம் கூடாதிருக்கவேண்டும். திருஷ்டாந்தமாக ஒரு எலுமிச்சங்கனியோடு பிறிதொரு எலுமிச்சங்கனி கூடுமாயின், ஒருபக்கம் கூடி மற்றப்பக்கம் கூடாதிருக்கப் பிரத்தியக்ஷமாகக் காண்கின்றோம். இவ்வாறே ஒரு பொருளோடு பிறிதொரு பொருள் கூடுங்கால் ஒருபக்கங்கூடி மற்றப்பக்கம் கூடா. கூடியவிடத்துக் கூடாமையும் நிகழ்தலன், முன் பின் நடு முதலியன நிகழ்வது ஒருதலையாம். எது அவயவத்தோடுங் கூடியதோ அஃது ஓர்போதும் காரணமாகாது; காரியமேயாமென்பது திண்ணம். காரணமாயிருப்பன யாவும் காரியமாக, இஃதொன்று மாத்திரம் காரியப்படாதென்பது நியாயமல்ல. எது எவ்வாறிருக்கினும் காரணமொன்றிருக்கவேண்டுமெனின், அது மாத்திரம் ஏன் காரியமாகாது? உலகம் உண்டாதற்குக் காரணமொன்று வேண்டுமேயெனின் அங்கு காரணமான அணு நிலைபெற்றதல்லவா இங்கு உலகமென்பது சத்தாம்? காரிய காரண முடிவின்றிச் செல்லுமெனின் அளவுகடத்தல் என்னும் அனவஸ்தா தோஷமுண்டாகும். ஆதலால் முடிவில் எவ்வகை அணுவும் இருப்பதாக வுரைத்தல் ஒருவாற்றானும் பொருந்தாதென்க.

கண்ணுக்கு விஷயமான அணு அசத்தாயினும் கண்ணுக்கெட்டா அதிநுட்ப அணு சத்தென்றுரைப்போமெனின், அஃது பிரத்தியக்ஷமன்று, அநுமானப்ரமாணத்தால் அறியப்படுமெனின், பிரத்தியக்ஷமான சத்தைக்கொண்டு அப்பிரத்தியக்ஷமான சத்தையறிவது அநுமானத்துக்கு இலக்கணமாம். இவ்விலக்கணத்தால் புகையுஞ்சத்து, நெருப்பஞ் சத்து; புகை பிரத்தியக்ஷம், நெருப்பு அப்பிரத்தியக்ஷமாம். பிரத்தியக்ஷமானபுகையால் அப்பிரத்தியக்ஷமான நெருப்பை யறிவது தகுந்த திருஷ்டாந்தம். இந்தத் திருஷ்டாந்தத்தைப் போல் தாஷ்டாந்தம் ஒவ்வவில்லை. கண்ணுக்கு விஷயமான அணு அசத்தென்று துணியப்பட்டது. கண்ணுக்குப் புலப்படாத அணு அவசியம் சத்தா யிருக்க வேண்டுமென்பது பூர்வபக்ஷியார் கருத்து. பிரத்தியக்ஷமான புகை சத்தாயிருப்பதுபோல தாஷ்டாந்தத்தும் கண்ணுக்கு விஷயமான அணு சத்தாயிருக்கவேண்டும். அங்ஙனமின்றி அது அசத்தாய்ப்போனமையால் திருஷ்டாந்தம் ஆபாசமாகின்றது. கண்ணுக்கு விஷயமான அணு சத்தாயிருக்குமேல பிரத்தியக்ஷமான இந்தச் சத்தைக்கொண்டு அப்பிரத்தியக்ஷமான (கண்ணுக்குத் தோன்றா) அணு சத்தாயிருக்கின்றதென்றே அநுமானிக்கலாம். புகையை ஆராய்ந்தபோது பனியாய்ப் போமானால் புகை அசத்தாய்ப் போயன்றா? புகை அசத்தாய்ப் போமானால் நெருப்பு எப்படி சத்தாகும்? அநுமானப்பிரமாணம் தோற்றமென்றும், யதார்த்தமென்றும் இருவகைப்படும். அவற்றுள் தோற்ற அநுமானத்தால் பொருள் சித்தித்திலது; யதார்த்த அநுமானத்தாலேதான் பொருள் சித்திக்கற்பாற்று. புகை யதார்த்தம்; புகையைப்போல் தோற்றி ஆராய்ச்சியில் பனியாய்ப் போவதுதோற்றமாம். யதார்த்தமான புகையால் நெருப்புசித்திக்குமன்றித் தோற்றப் புகையால் (அதாவது பனியால) சித்தியாது. அவ்வாறே கண்ணுக்கு விஷயமான அணுவால் கண்ணுக்கு விஷயமாகாத அதி நுட்ப அணு சித்தித்தலின்றென்க.

இதுவரையிலும் கூறிப்போந்ததனால் "அணு முடிவில்லாமற் போய்விடுதல் அசங்கதம். கண்ணுக்குக் காணக்கூடாமல் அதிசூட்சுமமாயிருக்குமதத்தால் அதனையில்பொருளாகத் துணிதல் கூடாது,, என்று பிரதிவாதியாருரைத்தது நியாயமாகவே பூர்வபட்சப்படுகின்றது. "(உள்ளதுபோகாது, உள்ளது உள்ளதே) என்னுந் தருக்கத்தால் கடம் சிதைந்து பரமாணுவானவிடத்தும் போகாததும், உள்ளதுமேயாம்,, என்றார். 'உள்ளது போகாது, உள்ளது உள்ளதே' என்னும் தருக்கம் எமக்கும் உடன்பாடே. கடம் உள்ளதென்று நியாயத்தால் காட்டின பின்னன்றோ அது பரமாணுவான விடத்தும் உள்ளதென்றுரைக்க வேண்டும்? கடம் சத்தென்பதற்கு யாதொரு ஆதாரமுமில்லாமையால் அதையுள்ள பொருளென்றுரைத்தல் அமையாது. கடமானது நிகழ்காலத்திலேயேயில்லையென்றபோது பரமாணுவானகாலத்திலா இருக்கப்போகின்றது? "(இல்லது வாராது, இல்லது இல்லதே) என்னுந் தருக்கப்படி உலகமில்லதாயின் வரமாட்டாது. வந்திருக்கையால முயற்கோடுபோல்இல்லதாகமாட்டாது,, என்றார். 'இல்லது இல்லதே' என்னுந் தருக்கத்தை யாம் அநாதரவுசெய்தேமில்லை. அது எமக்குஞ் சம்மதமேயாம். ஆனால் அந்தத் தருக்கத்தின்படி உலகம் இல்லதேயென்றும், இல்லாமையால் வரவில்லையென்றும் கூறுகின்றும். "உலகம் இல்லாததாயின் (இல்லதற்குத் தோற்றமின்மையின்) என்ற நியாயத்துக்கு விரோதமுண்டாம்; அவ்வுலகு தோன்றியிருத்தலால்,, என்றார். இல்லதற்குத் தோற்றமில்லையென்பது குற்றம்; கயிற்றிற் பாம்பும், கானலினீரும், சந்நிபாத தோஷமுள்ளவனுக்கு எதிரில் தோன்றும் பொருள்களும், சொப்பனத்தில் பிரபஞ்சமும் இல்லாதனவாயிருந்தும் தோற்றுகின்றமையாலென்க. தோற்ற மிருவகை: உள்ளபொருள் தோற்றுதலும், இல்லாப்பொருள் தோற்றுதலுமாம். இல்லதற்குத் தோற்றமில்லையென்பதன் பொருள் அசத்து அல்லது சத்துப்போலிக்குச் சத்துத்தோற்றமில்லையென்பதாம். கயிற்றிற்காணும் (இல்லாத)பாம்பு யதார்த்தமான தோற்றமல்லவென்பதாம். "அது ஒடுங்குமிடத்து இல்லாததாய் விடுமெனின், (யாதுயாண்டொடுங்கு, அஃதாண்டுதிக்கும்) எனவும், (ஒடுங்கின விடத்தினின்று மீளவுண்டாம்) எனவும், போந்த தருக்கவுரைகளால் புனருற்பவங் கூறும் வேதாகமங்களும் பொய்ப்பட்டுப்போம்,, என்றார். ஒடுங்குதலாவது காரியம் காரணத்தில் அடங்குவதென்பது அவர் சம்மதம். காரியத்திற்குப் பொருளின்மை தெளிவாகாமையாலும், அதற்கு மறுப்பினை முன்னரே யாமுரைத்திருக்கின்றமையாலும் ஒடுங்குதலென்பது சொல்மாத்திரமே; பொருள் இருந்தன்று. கானலினிடத்து நீரும், அறிவின்கண் சொப்பனவுலகமும் ஒடுங்கி, ஒடுங்கின விடத்தினின்று மீளவுண்டாவதுபோலெனின நியாயமாகும். அவ்வாறன்றிச் சத்தென்பதமையாது. 'யாண்டொடுங்கும், அஃதாண்டுதிக்கும்' என்பதற்குக் கடம் மண்ணின்கண் ஒடுங்கி மீண்டும் அதினின்றே உதிக்குமென்று வைத்துக்கொள்ளலாம்; ஆனால் இது வியாவகாரிகமேயன்றி உண்மையன்று; மண்ணைத் தவிர கடம் முக்காலத்துமின்றாதலாலெனக. ○கிரமசிருஷ்டியுரைக்குமிடத்து வேதம் வியாவகாரிக சிருஷ்டியை அங்கீகரித்து; 'பூர்வவத்,' ○யுகபத்சிருஷ்டியைச்சொல்லும்போதும் அவ்வேதம் க்ஷிகிரமசிருஷ்டியைப் பூர்வபக்ஷம் பண்ணிக் கண்டனஞ்செய்தது. (ஆதலால் யாதுயாண்டொடுங்கும், அஃதாண்டுதிக்கும்) எனவும், (ஒடுங்கினவிடத்துனின்று மீளவுண்டாம்) எனவும் கூறிய தருக்கவுரை பூர்வபட்சமாகச் சம்மதமாம். உலகைச் சத்தெனக் கொள்ளுவாரை அநுசரித்து வேதமுன்பு கிரமசிருஷ்டி கூறி, பின்பு யுகபத் சிருஷ்டியுரைப்பதென்றுணர்க. ஆதலால் இது வைதிக சித்தாந்தமாமேயாம். இது நிற்க; இன்னும் உலகம் அசத்தைப்பற்றிக் கூறுவாம் :—

(உலகினின்றும் பற்பல பொருள்கள் காரியப்பட்டுப் பின் காரணமாவதைக் கண்டிருக்கின்றோம், அல்லாமல் உலகம் காரியப்படுவதை நாமேனும் நம்முன்னோரேனும் கண்டதுமில்லை; கேட்டதுமில்லை. காணுதல் உடலன்றியாகாது; கேட்பது பிறர் கூறியே கேட்கவேண்டுவது; கூறல் காணுதலின்றி யமையாது காணுதல் உடலோடு கூடியே ஆகவேண்டுவது; உடலுலகன்றியின்றாம். உலகத்தினது இல்லாமை உடலில்லாமற் பிறிதொன்றிருந்து கண்டாரையாம் காண்கின்றிலேம்; ஆதலால் உலகம் என்றுமுள்ளது; காரியமன்று, காரணமேயெனின் கூறுவாம்:—

ஒவ்வொருபொருளினையும் ஆராய்ச்சிசெய்யின் ஒன்றன் கூட்டம், அல்லது பலவின் கூட்டமென்று இருவகைப்படும். எந்தப்பொருளும் இவ்விருதன்மையிலேயடங்கும். திருஷ்டாந்தமாகக் கடம் ஒன்றன் கூட்டமா? பலவின் கூட்டமா? எனின் ஒன்றன்கூட்டமேயாம். ஒன்றன் கூட்டமான மண்ணையன்றிக் கடம் முக்காலத்துமின்றாம். அம் மண்ணும் ஒன்றன்

○ கிரமசிருஷ்டி: ஒன்றன்பின் ஒன்றுயுதிப்பது; பஞ்சினிடத்து நூலும், நூலின்கண் ஆடையும்போல.

○ யுகபத்சிருஷ்டி: ஒரேதடவையாயுதிப்பது; அது கடல்நீர் அலைநுரை குமிழிபோல்வதுபோல.

கூட்டமான அணுவினையன்றியின்றாம், பலவின் கூட்டமிது போலுமென்க. இவ்வண்ணமே ஒவ்வொருபொருளையும் ஆராயுமிடத்து அபாவமாகவே முடியும். உலகு இவ்வகைப்பட்ட ஆராய்ச்சியில் அபாவமாம். ஒன்றன்கூட்டம் பலவின்கூட்டமென்பவை காரணமாம். அணுவை முன்பே பூர்வபக்ஷம் செய்தமையாலாண்டு கண்டுகொள்க.

"உலகம் காரியப்படுவதைக் கண்டாரும் கேட்டாரும் இல்லையாகலின் எப்போதும் நித்தியமென்றுரைப்பாம்" எனின் உலகம் எப்போதும் சத்தாய் நித்தியமா? அசத்தாய் நித்தியமா? சத்தாய் நித்தியமேல் இதுவரையிலும் முரைத்த நியாயங்களால் சத்தென்றுரைப்பது பொருந்தாது; அசத்தாய் நித்தியமேல இல்லாதது நித்தியமென்று கூறுதலினால் யாதுபயன்? இல்லாத முயற்கொம்பினையும் நித்தியமென்றுரைப்பதனோடு ஒக்குமல்லவா? உலகு எக்காலத்தும் அசத்து அல்லது சத்துப்போலியாகலின் அதனைக் காரியமென்றேனும் காரணமென்றேனும் கூறுதல் எவ்வாற்றானும் பொருந்தாதென்றுணர்க.)

இதுமட்டும் கூறிவந்ததில் உலகம் அசத்தாயினும் பிரத்தியக்ஷமாகச் சுகதுக்கங்களை அநுபவிக்கின்றோமே; எப்படி உலகத்தை அசத்தென்றுரைப்பது? இது வயயடி சையடியாயிருக்கின்றதன்றிச் சந்தேகமொழியல்லவே யெனின் சொப்பன முற்றும் பொய்யல்லவா? அச் சொப்பனத்தில் பிரத்தியட்சமாக அநுபவிக்கும் இன்பதுன்பங்களும் அவ்வுலகமும் பொய்யாய்ப் போகவில்லையா? அங்ஙனமேயிவ்வுலகையும் அதனின்ப துன்பங்களையும் ஏன் பொய்யென்றியம்பப் படாது?

ஒருபொருளை யறியவேண்டின் அப்பொருளுக்கு வேறாய் நின்றே யறியவேண்டும். வீட்டை அறியவேண்டின் வீட்டிற்குவேறாய்நின்றே அறிகின்றோம்; கடபடங்களை யறியவேண்டுமானால் அவற்றையும் வேறாய்நின்றே அறிகின்றோம். இவ்வாறே எல்லாப்பொருள்களையும் அறிகின்றோம். அங்ஙனமே இவ்வுலகை யறியவேண்டின் வேறாய்நின்றே யறியவேண்டும். அங்ஙனம் கண்டுரைத்தார் யாருமிலர். கண்டவர், சமஷ்டியான உலக அமிசமான வியஷ்டி சரீரத்தைக் கொண்டு அறிகின்றமையால், அது வேறுபட்டு அறிந்ததாக யாங்ஙனம் உரைக்கலாம்? அசத்தியமான சொப்பன சரீரத்தின்கண் அவ்வசத்திய சகத்தின் அமிசமான அசத்திய சரீரத்தைக்கொண்டு அச்சகத்தை அவ்விடத்தில் காணும்வரையில் அது சத்தியமாகவே தோன்றினும், அச்சகத்தையும் அச்சகத்தின் அமிசமான சரீரத்தையும் விட்டு வேறாயிருக்கும் இப்போது, அது பொய்யாய்ப் போகவில்லையா? சொப்பனாவஸ்தையில் சொப்பன சகம் சத்தியமாகக் காணப்படினும் சத்தியமாக அறிவினும், அக்காலத்தும் அச்சொப்பனசகம் எப்படி பொய்யோ, அப்படியே இச்சகமும் இச்சக அமிசமான சரீரமும் பொய்யென்று ஏன் கூறப்படாது? ஐயமின்றிக்கூறலாம். இதனானே ஒருபொருளை அறியவேண்டின் அறிபவன் வேறாய்நின்றே அறியவேண்டுமெனவும், அவ்வாறின்றி அதனோடிருந்து அறிதல் பொய்யு மெய்யாய்த் தோற்றுமெனவும் கூறியவாறென்பது.

ஒருபொருள் உள்ளதா? இல்லதாவென ஆராயவேண்டின், அப்பொருளின் ஓர்பால்பிறிதோர் பாலொடுபொருந்துதலின்றியேஉள்ளதெனக்கொள்வது எவ்வாற்றானு மமையாது. அப்படிச்சொல்வதினால் கானநீரின் ஓர் பிறிதொரு அலையுடனே சம்பந்தப்படுவது கொண்டே, அக்கானல்நீரையும் உண்டென்று கொள்ளவேண்டிவரும். இங்ஙனமே உலகின் ஓர் பகுதி பிறிதொருபகுதியினோடு பொருந்துதலினானே உலகைச்சத்தென்றுரைத்தல் அடாது.

பொன் பூஷணமாய்த் திரிந்தபோதும் திரியாதபோதும் ஒரு தன்மையாயிருக்கக் கண்டோமென்றும், அவ்வாறு அறிவும் அறிபடுபொருளும் ஒருதன்மையாயிருக்கவில்லையென்றும் பிரதிவாதியார் உரைக்கின்றார். பொன்னாகிய காரணத்தில் பூஷணமாகிய காரியம் தோற்றமேயன்றித் திரிபல்ல; திரிபு போல் தோற்றுகின்றது. அவ்வாறே பரவஸ்துவின்கண் சேதனா சேதனமான உலகம் தோற்றுகின்றது. பரவஸ்து திரியவுமில்லை; காரியப்படவுமில்லை. இதுநிற்க;

(இன்னும்வரும பின்)

ஓர் அன்பர்

Bible Dissector (English)	0	0	6
One Hundred anb Fifty Contradictions of the Bible (English)	0	1	0

ப்ரம்மவித்தியா யந்திரசாலையில்
விற்கப்படும் தமிழ்புத்தக

விளம்பரம்

கிறிஸ்தவர் விடைகளின் மறுப்பு.
இஃது ஓர் சமஸ்கிருத பண்டிதரால் எழுதப்பட்டது.
விலை அணா 2.

நீக்கிர்த்தனை	,,	க	௬
ஆன்மாவும் சரீரமும் இஃது நாஸதிகர் கேழ்விக்கு விடை	,,	க	,,
சன்மார்க்கபோதனி	,,	,,	௩
சீகாழித்தலபுராணம்	,,	அ	,,
வேளூர்புராணம்	,,	௬	,,
சந்தபுராணநவநீதம்	,,	௪௨	,,
பஞ்சதசோபநிஷத்து	க	உ	,,
அஷ்டாங்கயோகம்	,,	௫	,,
மனுமுறைகண்டவாசகம்	,,	௪	,,
கிறிஸ்துமதகண்டனம்	,,	க	,,
சிவனுந்தேவனுஎன்னுந்திருநாவுக்காப்பு	,,	,,	,,
யேசுக்கிறிஸ்து மனிதனே	,,	,,	௬

விவேகசுந்தரம்.
நெ. க-உ-௩-௪-௫-௬-எ-அ
பிரதி ஒவ்வொன்றுக்கு விலை பை மூன்று

CHIDAMBARAM:—Printed and Published for the Proprietor at the Brahmavida Press

𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌦𑍍𑌯𑌾.

{௩. புத்தகம்}

பத்திர கிரயம்
1வருஷ 2—12—0
6மாஸ 1—8—0
3மாஸ 0—14—0
1காபி-0—2—6
இலங்கைக்கு,
3—8—0.

{VOL-3}

ப்ரம்மவித்தியாபத்திரிகை.

மாதம்
இருமுறை
பிரசுரஞ் செய்யப்படும்

{இலக்கம்-எ}

பத்திரகிரயத்தை மணியார்டராகவாவது ரூ. 1-க்கு அணா 1. சேர்த்து தபால்லேபில்கவாவது சிதம்பரம் ப்ரம்மவித்தியாப்ரெஸ்மானேஜருக்குஅனுப்புதல்வேண்டும்.

{NO.7}

[illegible] ।   [illegible] ।

சிதம்பரம்:— ௧௮௮௮வரு செப்டெம்பர் மீ ௩௰௨ சர்வதாரிவரு பிரட்டாசிமீ ௧௬௨

𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌦𑍍𑌯𑌾.

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

ப்ரம்மவித்தியா.

சிதம்பரம்:— 1888வரு செப்டெம்பர் மீ 30உ

மறுபிறப்பு.

(முன்தொடர்பு)

ஐயா, இஃது நாத்திகர் கேழ்விகளுள் இறுதியிலுள்ளது. "இச்சரீரத்தின் முன்னுகிலும் பின்னுகிலும் இறப்பதற்குப் பிரமாணம் யாது" என்பது. இது முற்கூறியுள்ள காரணங்களான் மறுக்கப்பட்டதாயினும் மீண்டும் ஒருவாறு சுரிக்குரைப்பாம். ஜீவன் என்னும்வஸ்து அணுவாயுள்ளது என்று முன்னேகூறியுள்ளோம்; அணுவாயுள்ள வஸ்து அநாதியாயும் அழிவற்றதாயும் இருத்தல் அவசியம். அவ்வான்மப்பொருள் நித்தம் சரீரத்தை அவாவுந்தன்மையுளது. ஆகையால் முத்திநிலை ஒன்றைத் தவிர்த்து மற்றெக்காலத்தும் அவ்வான்மா சரீரத்தை விட்டிராது. மேலும் முன்னனுபவமுண்டென்றும், மரணகாலவாசனை மறுபிறப்பைக் காட்டுமென்றும் இன்னுமனேக யுக்திகளை முன் எடுத்தோதினோம் என்றறிந்கொழிக. இனி ஜீவன் வாசனையற்றிருந்து முத்தி பெறுவானேல், அவனுக்கு இயற்கையாய் அநாதிதொடங்கி ஏற்பட்டுவந்த வாசனை முத்திகாலத்தில்மட்டில் எவ்விதம் ஒழியும்? எனில் கூறுவாம்: இங்கு அறியவேண்டிய உண்மையிது: ஒரு ஜீவன் முத்திபெறவேண்டுமேல் தனது இயற்கைவாசனைமாற ஓர் அப்பிராகிருத (அதாவது யாம் காணும் வஸ்துக்களினும் வேறான இலக்கணம் பெற்றது) திவ்வியவடிவைப்பெற்றவனாய் பரமேசுவரனைத் தியானிப்பான். அவனே உத்தமாதிகாரியாயின் அவனது திருவருளைத் தனியே ஓர்